[1974 சனவரி 21

Tamil Medium Section in the Law College

@ * 8 Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR & THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Education be pleased to state whether there is any proposal with the Government to introduce a Tamil medium section in the Law College for the benefit of the students whose medium of instruction was Tamil during their degree course?

சட்டக் கல்லூரியில் தமிழ் விரிவுரை வகுப்பு

தவத்திரு குன்றக்குடி அடிகளார் & திரு. எல். பலராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

தமிழ் மூலம் பட்டம் பெற்ற மாணவர்களுக்கு சட்டக் கல்லூரியில் தமிழ் மூலம் படிக்க வசதியாகத் தமிழ்ப்பிரிவு அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

ஆனால், தமிழ் மூலம் பட்டம் பெற்ற சில மாணவர்களின் முறையீட்டின் மேல் முதலாண்டு மாணவர்களுக்குத் தமிழ் மூலம் விரிவுரை வகுப்பு ஒன்று இவ்வாண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு ஆங்கிலத்திலும் விரிவுரை உண்டு, தமிழிலும் விரிவுரை உண்டு.

(பிற்பகல் 4-30)

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவரவர்களே, அண்மையிலே சென்னை யிலே நடந்த கல்லூரி மாணவர்கள், பேராசிரியர்கள் ஆய்வு ஒன்றில் தமிழ் பயிற்சி மொழிக்கு 80 சதவீத மாணவர்களும் 60 சதவீத ஆசிரியர்களும் எதிர்ப்பாக இருப்பதாக ஒரு செய்தி வந்தது. அதன் மீது அரசு என்ன நட வடிக்கை எடுத்தது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, லயோலா கல்லூரியில் இருக்கிற பொருளாதாரத் துறையினர் ஒரு சர்வே நடத்தினார்கள். அவர்கள் கேள்விகளைத் தயாரித்து கிட்டத்தட்ட 4 ஆயிரம் மாணவர்களுக்கும், 300, 400 ஆசிரியர்களுக்கும் அனுப்பி அவர்களின் அபிப்பிராயங்களைக் கேட்டார்கள். அவர்களின் அபிப்பிராயங்களைத் திரட்டி இன்னார் எதிர்க்கிறார் கள், இன்னார் ஒத்துக்கொள்ளுகிறார்கள் என்று தெரிந்து, அந்த விவரங்களைத்

@ 19—1—1974-ம் தேதி வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.

1974 சனவரி 21]

தந்திருக்கிறார்கள். அது தான் பத்திரிகையில் வந்திருக்கிறது. அதன் தொடர் பாக நாம் நடவடிக்கை எடுக்கத் தக்க அளவிற்கு அரசாங்கத்திற்கு அனுப்பப் படவும் இல்லை, அதன் மீது நாம் நடவடிக்கை எடுக்கவும் இல்லை. ஏற்றுக்கொள் ளப்பட்ட கொள்கையை நாம் முறைப்படுத்தி நடைமுறைப்படுத்துவதற்கு எந்தெந்த வகையில் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமோ அந்த அளவிற்கு முயற்சிகளை மேற்கொள்ளலாம். இந்த ஆண்டு சட்டக் கல்லூரியில் ஒரு வகுப்பு எடுக்கப்பட்டு, தமிழில் விரிவுரை சொல்லப்படுகிறது. அது நல்ல வகையில் பலன் அளிக்கிறது, மாணவர்கள் ஓரளவிற்கு விரும்புகிறார்கள் என்றாலும் கூட, இந்த ஆண்டு இப்படி நடைபெறுகிறது. அடுத்த ஆண்டிலிருந்து ஒரு பிரிவை தமிழில் நடத்த முயற்சிகளை மேற்கொள்ளலாம். இந்த ஆண்டு எப்படி நடை பெறுகிறது என்று தெரிவிக்குமாறு சட்டக் கல்லூரி இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, தமிழ் நாட்டில் இப்போது சட்டங் களைத் தமிழ் படுத்தும் முயற்சி எந்த அளவிற்கு நடைபெற்றுக்கொண்டு வரு கிறது? சட்டக் கல்லூரியிலே தமிழிலேயே பாடம் போதிக்கக் கூடிய முறையை எத்தனை ஆண்டுகளில் கொண்டு வரத் திட்டமிடப் பட்டிருக்கிற தென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இதற்காக தனிக் குழு ஒன்று அமைக்கப்பட்டு அந்தக் குழுவினர் கலையாக்கச் சொற்களை, சில பல சட்டங்களை மொழி பெயர்த்துக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு மத்திய அரசு துணை புரிந்து வருகிறது. மாநில அரசும் நடவடிக்கை எடுத்து தனியான பிரிவினை வைத்து நடத்துகிறார்கள். எப்போது முடியுமென்று சொல்வதற்கில்லை. ஏராளமான சட்டங்களை மொழி பெயர்க்கவேண்டிய அவசியமிருக்கிறது. ஆனாலும் பரீட்சார்த்தமாக இருக்கட்டும் என்று சொல்லி, முதலாண்டு சட்டக் கல்லூரிப் படிப்பினை, தமிழிலே விருப்பப்பட்டுச் சேருகிற வர்களுக்கு நடத்திக்கொண்டு வருகிறார்கள். இது நல்ல பலன் கொடுக்கு மானால், ஆங்கிலத்தில் ஒரு பிரிவையும், தமிழில் ஒரு பிரிவையும் நடத்தலாமா என்று ஆராய்ந்துகொண்டிருக்கிறோம். இதுபற்றி விவரமான அறிக்கையை இந்த ஆண்டு இறுதியில் தரும்படியாக சட்டக் கல்லூரி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு. ம. பொ. சிவஞானம்: தலைவரவர்களே, தமிழில் மொழி பெயர்ப் பதற்கு ஒரு பக்கம் குழு வேலை செய்துகொண்டிருக்கிறது. அதற்காக பணம் செலவழிக்கப்பட்டு வருகிறது. ஏற்கெனவே ஆங்கிலத்தில் இயற்றப்பட்ட சட்டங்களை மொழி பெயர்ப்பதற்கு. இப்படி முயற்சி எடுக்கிறபோது, இப்

போது நடைமுறையில் இயற்றப்பட்டு வருகிற சட்டங்களையேனும் தமிழில் வெளியிட்டால்தான் மொழி பெயர்ப்பு வேலை தேவையில்லாமல் போகும். ஆனால் பழைய சட்டங்களைத் தமிழில் மொழி பெயர்க்கும் பணியும் நடக்கிறது; அதே சமயத்தில் புதுப்புதுச் சட்டங்களை ஆங்கிலத்தில் மட்டுமே நிறைவேற்று கிற வேலையும் நடக்கிறது. இந்த முரண்பாட்டிற்கு முடிவு என்று வருமென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றி அரசாங்கம் முயற்சி எடுத்து வருகிறது. இப்போது சட்டத் துறை, நிதித் துறை போன்ற சில துறைகளில் தமிழை ஆட்சி மொழியாக்குகிற முயற்சி மெல்ல மெல்ல மேற்கொள்ளப்படவேண்டியிருக்கிறது. அண்மையில் மாண்பு மிகு முதலமைச்சரவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழில் கொண்டு வருவதை எவ்வளவு விரைவுபடுத்தவேண்டுமோ அவ்வளவு விரைவு படுத்தவேண்டுமென்றும், கூடுமான வரையில் சட்டங்களைத் தமிழில் அறிமுகப் படுத்த வேண்டுமென்றும் அறிவித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில், நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது, சட்ட முன்வடிவுகளைக்கூட தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் சில பல ஆண்டுகளில் கொடுப்பதற் கான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, தற்போது தமிழில் பயனுவதற் குரிய வாய்ப்பைப் பெருக்குவதற்கு பட்ட வகுப்புகளில் தமிழ் வழி பயிலுகிற வசதியைச் செய்து கொடுத்திருக்கிறோம். அது மாதிரி சட்டக் கல்லூரியில் தமிழ் வழி பயிலுகிற வசதியைச் செய்கிறபோது, தமிழ் வழி பயின்றவர் களுக்கு வேலையில் முன் சலுகை இருப்பதற்குரிய சட்டம் இயற்றப்பட்டிருக் கிறதா? தமிழ் வழி பயிலுவதால் பின்தங்கி விடுகிறார்கள் என்ற அச்சம் இருக்கிறதே, பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் தமிழ் வழி பயின்று பி.ஏ. படித்தவர் களுக்கு 5 மார்க்குகள் கூடுதலாகக் கொடுக்க விதி ஏற்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அப்படிப் பட்ட நிலைமைகள் இல்லை. ஆனால் பல இடங்களில் தமிழில் படித்து வருகிற வர்களும் வைக்கின்ற தேர்வுகளில் சிறந்த மதிப்பெண்களைப் பெறுகிறார்கள் என்று தெரியவருகிறது. மருத்துவக் கல்லூரி மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் போதும் பொறியியல் கல்லூரி மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும்போதும், புகுமுக வகுப்பில் ஆங்கிலத்தில் படித்தார்களா அல்லது தமிழில் படித்தார் களா என்ற வேறுபாடு கருதாத வகையில் தான், அவர்கள் எடுத்த மதிப்பெண் களை வைத்துக்கொண்டு அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆகவே அவர்

1974 சனவரி 21]

கள் குறைவாகக் கருதப்படுகிறார்கள் என்பதல்ல. மேலும், நீதி மன்றங்களில் தமிழில் கொண்டுவர வேண்டுமென்ற முயற்சி அடி மட்டத்திலிருந்து நடக்கிறது. எதிர்காலத்தில் அப்படி வருகிறபோது, தமிழில் சட்டக் கல்விப் படிப்பைச் சொல்லிக் கொடுப்பதன் மூலம் ஆக்கம் ஏற்படும். இப்போது சட்டக் கல்லூரியிலே விருப்பத் தன்மையிலே தமிழில் பாடம் சொல்லிக் கொடுக்கிற தன்மையில் வகுப்பு துவக்கப்பட்டிருக்கிறது. தமிழில் பாடங்களைத் திட்டவட்டமாகத் துவக்கும்போது, உறுப்பினர் அவர்கள் கேட்பது போன்ற சலுகையைக் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுமாவென்று யோசிக்கலாம்.

திரு. க. அறிவழகன்: தலைவரவர்களே, சட்ட மன்றங்களில் இயற்றப்பட்ட சட்டங்களை மொழி பெயர்ப்பதற்கென்று சட்ட மன்றத்திற்காகவே தனித் துறை அமைப்பதற்கு அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மொழி பெயர்ப்பதற்கென்று ஒரு தனித் துறை தலைமைச் செயலகத்திலே இருந்து வருகிறது. இது தவிர, தமிழ் ஆராய்ச்சித் துறையில் மொழி பெயர்ப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்க சட்டமன்றத் துறையில் உள்ளவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். உரிய துறைக்கு அனுப்பப்பட்டு மொழி பெயர்ப்பு வாங்கிக் கொள்ளப்படுகிற வகையில் எதனைச் சரியானதாகக் கொள்ள முடியுமோ அந்த வகையில் செய்யலாம்.

THIRU G. VASANTHA PAI: Sir, some time back there was a proposal to hold examinations for Judges who wrote the best judgment in Tamil. May I know, Sir, how many judges appeared for such examination and how many of them passed?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அது பற்றிய விவரமில்லை.

MR. CHAIRMAN: Still they are trying.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, நம்முடைய மேலவையினுடைய நடைமுறைபற்றிய விதிகளெல்லாம் தமிழில் வகுக்கப்பட்டிருக்கின்றன, இது பாராட்டுக்குரிய முயற்சியாகும். அதைப் போலவே இங்கே வரக்கூடிய சட்ட முன்வடிவுகள் அத்தனையும் தமிழில் வரக்கூடிய நிலை வர வேண்டும். எந்தச் சட்ட முன் வடிவானாலும், அடுத்த கூட்டத் தொடரிலிருந்து தமிழிலேயே கொண்டுவரப்பட்டு, அதற்குத் துணையாக, தமிழ் தெரியாதவர்கள் ஆங்கிலத்தில்

படிக்கக் கூடிய வண்ணத்தில் கொண்டு வருவதற்கான முழு முயற்சியை இந்த அரசு, தமிழர்களை, தமிழர்களால் ஆண்டு கொண்டிருக்கிற அரசு, செய்ய வேண்டும். ஆங்கிலம் தெரியாமல் சங்கடப்பட்டுக்கொண்டிருக்கிற நிலையை மாற்றுவதற்கு தமிழில் சட்டங்கள் வருவதற்கான முயற்சியில் அரசு ஈடுபடுமா, இதை விரைவுபடுத்தி அடுத்த கூட்டத் தொடரிலிருந்து கொண்டுவருவதற் கான முயற்சியில் அரசு ஈடுபடுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் முதலில் கூறியபடி, எடுத்த எடுப்பில் முழுவதையும் உறுதிமொழி அடிப்படை யில் செய்யக்கூடிய ஒன்று அல்ல, மெல்ல மெல்ல முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அப்படிச் செய்யும் போது, பழக்கப்படுகிற நிலைமை ஏற்பட வேண்டும். எல்லாவற்றையும் நாளைக்கே வைத்து விட்டால் தமிழ் தெரிந்தவர் களுக்கும் புரியாத நிலைமையில் தான் பல சட்டங்கள் இருக்கும். ஆகவே, தமிழானாலும் பழக்கம் நமக்கு வேண்டும். அந்த வகையில் முயற்சிகள் மேற் கொள்ளப்படும். இது தீவிரப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித் துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கேள்வியிலிருந்து ரொம்ப தூரம் போய் விட்டீர்கள். கேள்வி அது அல்ல. கேள்வியைப் படிக்கிறேன் பாருங்கள்.

" Thavathiru Kundrakkudi Adigalar and Thiru L. Balaraman: Will the Hon. the Minister for Education be pleased to state whether there is any proposal with the Government to introduce a Tamil Medium Section in the Law College for the benefit of the students whose medium of instruction was Tamil during their degree course? "

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, கலைக் கல்லூரிகளில் தமிழ் மூலம் போதிக்கும்போது மாணவர்கள் அதில் பங்கு பெருத சூழ்நிலை ஏற்பட்டிருக் கிறது. அவர்கள் அதில் கலந்து கொள்ளவில்லையென்று பரவலாகப் பேசப்படு கிறது. அதே முறையில் சட்டக் கல்லூரியில் தமிழ் போதனை முறையில் எவ் வளவு மாணவர்கள் கலந்துகொள்ளுகிறார்கள், அவர்களுக்கு ஊக்கம் காட்டு வதற்கு அரசு என்ன முயற்சி செய்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் முதலில் குறிப்பிட்டேன். இது சட்டக் கல்லூரியைப் பொறுத்த ஒன்று. சட்டக் கல்லூரியைப் பொறுத்த வரையிலும், ஒரு குறிப்பிட்ட பிரிவினர் மட்டும் தான் தமிழ் படிக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எவ் வளவு படிக்கிறார்கள் என்ற விவரக் குறிப்பு இல்லை. இது அவர்களுடைய விருப்பத்திற்காக இந்த ஆண்டு கொடுக்கப்படுகிறது. ஆக்க பூர்வமான ஆதரவு

1974 சனவரி 21]

இருக்கிறதென்று தெரிந்தால், அதற்காக தனிப் பிரிவு ஏற்படுத்தலாம். இது அடுத்த ஆண்டு கவனிக்கப்படும். கல்லூரிகளைப் பொறுத்த வரையிலும், 21 ஆயிரம் மாணவர்கள் புகுமுக வகுப்பைப் பொறுத்த வரை, தமிழ் எடுத்துப் படிக்கிறார்கள். இது நாளுக்கு நாள் கூடிக்கொண்டு வருகிறது. அந்த அளவிற்கு ஆங்கிலத்திற்கும் தனியாக வசதி செய்யப்பட்டிருக்கிறது. தமிழுக்கும் வசதி செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி(*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: திரு. செ. முத்துசாமி, திரு. ஜி. வசந்த பாய் ஆகியோர் திருத்தங்களைத் தந்திருக்கிறார்கள். அவர்கள் அத்திருத்தங்களை முன்மொழியலாம்.

(பிற்பகல் 4-40)

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தினை நான் முன்மொழிகிறேன்:

" That the following be added at the end :—

'but regret to note that no mention has been made—

1. about the grant of selection grade to the Secondary Grade teachers and Higher Grade teachers on the basis of ten years service;

2. about the payment of graduate scale of pay to the graduate teachers irrespective of the class they are teaching;

3. about the payment of medical allowance to the teachers:

4. about the conversion of all Higher Grade teachers as Secondary Grade teachers. "

THIRU K. S. GANAPATHI : I second it.

THIRU G. VASANTHA PAI : Sir, I beg to move the following amendment to the Motion of Thanks for the Governor's Address :—

" That the following be added at the end :